DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM

| | |
|---|---|
| Case No : CC.No.334/2022 | Deposition of Witness for : PW4 |
| Name : பெருமாள் | Father/Husband Name : சுடலைமணி |
| Age : 21 | Village : பெருமாள்குளம் |
| Taluk : சாத்தான்குளம் | Calling : காய்கறி வியாபாரம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 26 August 2025

Accused A3 present.

**<u>முதல் விசாரணை</u> :–**

1. நான் தற்போது பெருமாள்குளத்தில் குடியிருந்து காய்கறி வியாபாரம் செய்து வருகிறேன். அ.சா.1 யை தெரியும். எனது ஓனர் ஆவார். எதிரிகளை சம்பவத்தின் போது தெரியும். கடந்த 25.07.2022 ஆம் தேதி நாங்கள் ஏரல் சந்தையில் காய்கறி வியாபாரம் செய்து TATA ACE வாகனத்தில் வந்து கொண்டிருந்தேன். வாகனத்தை அ.சா.1 ஓட்டிக்கொண்டு வந்தார். அந்த வாகனத்தில் நானும் நவீன்குமார், கிருஷ்ணமூர்த்தி மற்றும் முத்துலிங்கம் ஆகியோர்கள் வந்தோம்.

2. இரவு 11 மணியளவில் வெள்ளமடம் முத்துநகர் அருகே வரும்போது எதிரிகள் அனைவரும் எங்களை புன்டா மவனே என்று ஆபாசமாக பேசி இனிமேல் இந்த வழியாக வந்தால் உங்களை கொன்றுவிடுவோம் என்று மிரட்டினார்கள். வண்டியின் முன் கண்ணாடியை கல்லைக் கொண்டு உடைத்தார்கள். மற்றும் வண்டியில் இருந்த காய்கறி மூடைகள் மற்றும் தராசை எதிரிகள் கீழே இழுத்துப் போட்டார்கள். அ.சா.1 யை எதிரி துரை கல்லைக் கொண்டு தலையின் பின்பக்கம் எறிந்தார். பின்பு அனைத்து எதிரிகளும் சேர்ந்து அ.சா.1 யை கைகளால் உள்ளங்கை, இடதுகால் முட்டி, விலா எழும்பு ஆகிய பகுதிகளில் தாக்கினார்கள். மற்றும் எதிரிகள் எங்களையும் தாக்கினார்கள். பின்பு நாங்கள் வாகனத்தை எடுத்துக்கொண்டு சென்றுவிட்டோம். அ.சா.1 சிவபெருமாள் மற்றும் அ.சா.3 கிருஷ்ணமூர்த்தி ஆகியோரின் செல்போன்களை காணவில்லை. காயம்பட்ட அ.சா.1 சாத்தான்குளம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தார். இதுசம்பந்தமாக அ.சா.1 புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

3. நான் அ.சா.1 சிவபெருமாள் என்பவருடைய கடையில் வேலை பார்த்து வருகிறேன் என்றால் சரிதான். சுமார் 5 வருடங்களாக அவருடைய கடையில் வேலை பார்த்து வருகிறேன். எனக்கு அவசர குடும்பத் தேவைக்காக பணம் தேவைப்பட்டால் எனது உரிமையாளர் அ.சா.1 யிடம் கைமாற்று பணம் வாங்குவேன் என்றால் சரியல்ல. சுமாராக சம்பவ இடத்தில் 5 நபர்கள் தான் இருந்தார்கள், அவர்களைத் தவிர வேறு நபர்கள் இல்லை. சம்பவத்தில்

DEVI RAKSHA M V Digitally signed by DEVI RAKSHA M V Date: 2025.08.26 17:16:51 +0530

ஈடுபட்டதாக சொல்லப்படும் 5 நபர்களுடைய பெயர்களும் எனக்கு தெரியுமா என்றால் 1ஆவது எதிரி துரை மற்றும் 3ஆவது எதிரி பாண்டி ஆகியோரது பெயர்கள் மட்டும் எனக்கு தெரியும், வேறு எதிரிகளின் பெயர்கள் எனக்கு தெரியாது.

4. வழக்கு சம்பவ இடத்தில் குடியிருப்பு பகுதிகள் இல்லை என்றால் சரிதான். நான் வந்த வாகனம் தாக்கப்பட்டதால் வாகனம் சேதமடைந்து கண்ணாடி சிதறல்கள் தரையில் காணப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கில் உள்ள எதிரிகள் யாரையும் எனக்கு சம்பவத்திற்கு முன்பாக தெரியாது என்றால் சரிதான். நான் வந்ததாக சொல்லப்படும் வாகனம் வேறு எங்கோ விபத்தில் சிக்கி ஏற்பட்ட சேதத்தை பயன்படுத்தி காவல்நிலையத்தில் புகார் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் என்னுடைய முதலாளி அ.சா.1 சிவபெருமாள் அளித்த பொய் புகாரில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போன்று சம்பவ இடத்தில் வைத்து வாகனங்கள் எதுவும் சேதப்படுத்தப்படவில்லை என்றால் சரியல்ல. வேறு எங்கோ ஏற்பட்ட சேதாரத்திற்காக, வேறு நபர்களால் தாக்கப்பட்டதாலும், இழப்பீடு பெறும் நோக்கத்தில் சம்பவ இடத்தில் வைத்து சம்பவம் நடந்ததாக பொய்யான புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போன்று சொன்ன விதத்தில், சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில் இந்த வழக்கு எதிரிகளால் அந்த வாகனம் தாக்கப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சம்பவத்திற்கும் எதிரிகளுக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

DEVI RAKSHA M V
Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2025.08.26 17:16:57 +0530

Judicial Magistrate, Sathankulam.